# வாக்கியம் அமைத்தல்

அ சொற்கள்

1. அம்மா

அம்மாவுக்கு என்னை மிகவும் பிடிக்கும்.

2. அப்பா

என் அப்பா அன்பானவர்.

3. அண்ணன்

என் அண்ணனுடன் கடைக்குச் சென்றேன்.

4. அக்கா

அக்கா எனக்கு உதவி செய்தாள்.

5. அன்னம்

அன்னப் பறவை அழகாக இருக்கும்.

6. அரசு

திருடனை தண்டிக்க அரசு ஆணையிட்டது.

7. அரசன்

அரசன் வேட்டையாடச் சென்றான்.

8. அம்மி

மஞ்சளை அம்மியில் அரைத்தாள்.

9. அரசி

அரசி புலவருக்கு பரிசு வழங்கினாள்.

10. அரிசி

அரிசி மூட்டையை தூக்கினான்.

11. அவல்

கண்ணனுக்கு அவல் பிடிக்கும்.

12. அறுவாள்

இளநீரை அறுவாள் கொண்டு சீவினார்.

13. அறுவடை

விவசாயிகள் நெல் அறுவடை செய்தனர்.

Notebook Writer

14. அணை

நீரை சேமிக்க அணையைக் கட்டினார்கள்.

15. அறை

வீட்டில் நான்கு அறைகள் உள்ளன.

16. அப்பளம்

எனக்கு அப்பளம் மிகவும் பிடிக்கும்.

17. அச்சம்

அச்சம் என்பது மடமை.

18. அறுசுவை

வேலவன் அறுசுவை விருந்து உண்டான்.

19. அதிகாரி

திருடனை காவல் அதிகாரி கைது செய்தார்.

20. அயல்நாடு

தேவா அடுத்த மாதம் அயல்நாடு செல்கிறான்.

Notebook Writer Notebook Writer Notebook Writer